நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், உதகமண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை :திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,

ந.க.எண்.19494/2015/ப3. நாள்:02-07-2020.

1227
13 JUL 2020

பொருள் : அனைவருக்கும் வீடு திட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – நீலகிரி மாவட்டம் – பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதிகளில் வீடுகள் அமைத்து கொடுக்கும் திட்டம் – 2018–19ம் ஆண்டு பழங்குடியினருக்கு சிறப்பு திட்டமாக 682 வீடுகள் கட்டி கொடுக்க அனுமதி வழங்கப்பட்டது – இவற்றில் 181 வீடுகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக கட்டிக் கொடுத்தல் – கட்டட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. நிர்வாகப் பொறியாளர், தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கோட்டம் அவர்களது கடிதம் ந.க.எண் 2086/AE(P)/ 2019, நாள் 27.12.2019.

2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கட்டிட வரைபட அனுமதிக் குழுக் கூட்ட நடவடிக்கைகள், ந.க.டி7.எண்.20458/2017 நாள் 17.06.2020.

---

உ த் தி ர வு

நீலகிரி மாவட்டம், தேவர்சோலை பேரூராட்சிக்குட்பட்ட பழங்குடியினர் மக்கள் வசிக்கும் குக்கிராமங்களுக்கு 682 வீடுகள் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 682 பயனாளிகளும் ஏற்கனவே PMAY (U) MIS Portal – BLC தலைப்பின் கீழ் பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் 181 வீடுகள் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. பயனாளிகள் அனைவரும் பழங்குடியினத்தவர் ஆனதால் தாங்களே வீடு கட்டும் (BLC) திட்டத்தின் கீழ் வீடு கட்ட இயலாத நிலையில் உள்ளதை கருத்தில் கொண்டு இவர்களுக்கு அனைவருக்கும் வீடு (AHP) திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டிக் கொடுக்க மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 2–ல் கண்ட செயல்முறைகளை தொடர்ந்து, மேற்படி 181 பயனாளிகளுக்கும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டி கொடுக்க வரையறுக்கப்பட்ட கட்டட வரைப்படத்தில் பேரூராட்சி செயல் அலுவலரால் ஒப்புதல் அளிக்க இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

TRUE COPY

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
நீலகிரி மாவட்டம்

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. CBE DN.

பெறுநர்

செயல் அலுவலர்,
தேவர்சோலை பேரூராட்சி
நீலகிரி மாவட்டம்.

நகல்: நிர்வாகப் பொறியாளர்,
தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கோட்டம்

423

அனுப்புநர்

திரு. எம். என். வேணுகோபால்,
செயல் அலுவலர்
தேவர்சோலை (தேர்வு நிலை) பேரூராட்சி,
தேவர்சோலை – நீலகிரி மாவட்டம்

பெறுநர்

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
கோயம்பத்தூர் கோட்டம்
397–ஏ. வடக்கு ஹசிங் யூனிட்
செல்வபுரம், கோயம்பத்தூர் –641026.

---

**ந.க.எண். 42/2020 நாள். 04–08–2020**

1392
6 AUG 2020

அய்யா,

பொருள் : அனைவருக்கும் வீடு திட்டம் – 2018– 2019 தேவர்சோலை பேரூராட்சி – குடிசை மாற்றுவாரியம் மூலம் வீடு கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது– Plan approval copy சமர்பித்தல் – தொடர்பாக.

பார்வை : மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் நாள் – 13–07–2020

-------

பார்வையில் கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் , உதகை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி தேவர்சோலை பேரூராட்சிக்குட்டபட்ட பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு அனைவருக்கும் வீடுத் திட்டத்தின் கீழ் குடிசை மாற்று வாரியம் மூலம் 23 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட Plan approval copy இத்துடன் அனுப்பபடுகிறது.

மேற்கண்ட Plan approval copy பெற்றமைக்கான ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செயல் அலுவலர்,
தேவர்சோலை பேரூராட்சி.

இணைப்பு – 23– Plan approval copy

நகல் – 1. மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

421